**மிஹிந்தலை பிரதேச சபையி - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மிஹிந்தலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் என்னால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயமொன்று வழங்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் - 2017 இன் படி தயாரிக்கப்பட்டுள்ளன எனும் கூற்று, தொடர்ந்து செல்லும் தன்மை, நிலைத்திருக்கும் தன்மை, அளவீட்டின் அடிப்படை, பயன்பாட்டு நாணய அலகின் அடிப்படை மற்றும் கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய குறிப்புகள் இலக்கம் 2 மற்றும் 3 தொடர்பான விவரங்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிஹிந்தலை நகரில் உள்ள கடல் மீன் தட்டுக்காக 2022 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய ரூபா.21,860 பெற வேண்டியவைகளின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | பெற வேண்டியவைகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விவசாய விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள கடை அறைக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டியதாக உள்ள கடை வாடகை ரூபா.198,000 ஆனது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் செலுத்தி முடிக்கப்பட்ட உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திடம் பெறப்பட்ட கடன் தொகை ரூபா.293,140 நீண்ட கால பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தது. | 2012 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட கடன் தொகையொன்று என்பதால் நீண்ட கால கடன்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | நடைமுறை பொறுப்புக்கள் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா.660,000 கணினி உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை காசுப்பாய்ச்சல் கூற்றில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவாக காட்டப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | பணத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சொத்துக் கொள்வனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் சபைக்குச் சொந்தமான ரூபா.5,000,000 நிலையான வைப்புத்தொகை இருந்த போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் அது ரூபா.4,500,000 ஆக ரூபா.500,000 குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி ரூபா.606,335 காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படவில்லை. | -மேற்படி- | வட்டி பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (எ) | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வட்டி ரூபா.53,478 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் செலுத்தப்பட்ட வட்டியாக கழிக்கப்பட்டு காட்டப்பட வேண்டிய போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது சேர்க்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | வட்டி கொடுப்பனவுகள் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஏ) | LDSP திட்டத்தின் ஒதுக்கீட்டிலிருந்து அலுவலக கட்டிடத்தின் கூரையில் சூரிய பேனல்களை நிறுவுவதற்கு மீளாய்வாண்டில் ரூபா.113,780 செலுத்தப்பட்ட போதிலும் சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் அது காட்டப்படவில்லை. | பத்திரிகை விளம்பரம் மற்றும் CEB இற்காக செலுத்தப்பட்டமையால் சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் அது காட்டப்படவில்லை. | சொத்து பொறிகளுக்காக செலவிடப்பட்டதால் அதன் கீழ் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் சபைக்கு ரூபா.1,133,826 ஆன மூலதன மானியங்கள் பெறப்பட்டபோதிலும் அது விரிவான வருமான கூற்றில் மூலதன மானிய பெறுவனவுகளாக காட்டப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | மூலதன மானிய பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | சபைக்கு எதிராக ஏனைய தரப்பினரால் 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | விபரங்கள் குறிப்பு மூலம் வெளிக்காட்டப்பட வேண்டும். |
| (ஓ) | சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்கு உரிய ரூபா.150,203,292 ஆன காணியின் பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்குரிய குறிப்பு 16 இல் காட்டப்படவில்லை. | காணியின் பெறுமதி காணிகள் தலைப்பின் கீழ் காட்டப்படாத போதிலும் மொத்தப்பெறுமதி மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | குறிப்புகளில் விபரங்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற வேண்டிய கடை வாடகை அட்டவணையின்படி ரூபா.285,150 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றின்படி அது ரூபா.388,642 ஆக இருந்தமையால் ரூபா.103,492 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | விரிவான வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளின் தொகை ரூபா.42,443,130 ஆக இருந்த போதிலும் தொடர்புடைய குறிப்பு 08 இன் படி அது ரூபா.36,587,995 ஆக இருந்தமையால் ரூபா.5,855,135 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | பெறுமானத் தேய்வு தனியாகக் காட்டப்பட்டமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட 50 கணக்குகளுக்கு பேரேட்டு கணக்குகள் பராமரிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நீண்டகாலமாக காணப்பட்டு வருவதுடன் காலப்பகுப்பாய்வு இருக்கவில்லை. | உறுதிப்படுததல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா.1,019,728 பெறுமதியான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக போதிய கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான சீராக்கமாக ரூபா 2,700,565 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதை உறுதிப்படுத்துவதற்கான விவரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 210(2) | மீளாய்வாண்டின் இறைவரி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக செலுததப்பட்ட ரூபா 21,630 ஆன தாமதக் கட்டணம் சம்பந்தப்பட்ட பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,760,906 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய் செலவினம் ரூபா 8,740,711 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. ரூபா | ரூபா. | ரூபா ரூபா. | ரூபரூபா. | ரூபா. | ரூபா | ரூபா.ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,045,050 | 1,296,700 | 1,296,700 | 101,844 | 1,124,050 | 1,173,700 | 1,173,700 | 101,844 |
| (ii) | வாடகை | 8,419,674 | 8,336,571 | 11,007,626 | 2,106,649 | 7,783,529 | 6,161,529 | 7,075,856 | 4,777,704 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 105,000 | 143,840 | 85,340 | 58,500 | 610,150 | 1,324,820 | 1,324,820 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,084,250 | 7,170,583 | 6,908,338 | 5,992,569 | 3,967,250 | 7,623,244 | 7,623,214 | 5,730,324 |
| | | 13,653,974 | 16,947,694 | 19,298,004 | 8,259,562 | 13,484,979 | 16,283,293 | 17,197,590 | 10,609,872 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| (i) 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134(11) இன் பிரகாரம், அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா.101,844 தொகையான குப்பை வரியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானத்தின் நிலுவை ரூபா.2,106,649 ஆக இருந்தது. | இந்நிலுவைத் தொகையில் ரூபா.671,260 தவிர மிகுதித் தொகை அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ii) | 2019 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற நிலுவை கேள்வி வாடகை ரூபா.768,592 ஆகும். | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி-. |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபையின் அதிகார வரம்பிற்குள் சபைப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகைகளுக்காக 2022 திசெம்பர் 25 இல் ரூபா.954,645 வசூலிக்கப்படவில்லை. | ரூபா 378,070 அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ii) | மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்ற அபராதத் தொகையான ரூபா.2,463,823 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.2,574,101 வசூலிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இத்தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | இத்தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய நிறுவனத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு சபைக்கு கிடைத்த குப்பை துண்டாக்கும் இயந்திரம் 2022 ஆம் ஆணடிலும் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குப்பை மேடு கட்டப்பட்ட பின்னர் இந்த குப்பை துண்டாக்கும் கருவியை பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுத்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 93(இ) பிரிவின்படி வீதிகளில் உள்ள குப்பைகள் வீடுகளில் உள்ள குப்பைகள் அனைத்தையும் அகற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது பிரதேச மன்றத்தின் சபையின் பணியொன்றாக இருந்த போதிலும் சபை அதன்படி செயற்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | குப்பைகள் முறையாக அகற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் சபையின் பொறுப்பொன்றாகும். |

.